Registered as a Newspaper
பக்கங்கள் 4
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham
மக்கள் தினசரி
Peoples Daily

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 11 | 25 - 05 - 1994 | புதன்கிழமை | ஓசை 96

## அத்தியாவசிய பொருள் எடுத்துவர சிறிய கப்பலொன்றை பெற முயற்சி

கொழும்பில் இருந்து வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருட்களை தனியார் துறையினர் எடுத்து வருவதற்கு சிறிய கப்பல் ஒன்றை சேவையில் அமர்த்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. தனியார்துறையினரும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்காக இதுவரை சேவையில் அமர்த்தப்பட்டிருந்த ''வாதுவ'' என்ற கப்பலுக்குப் பதிலாக புதிய சிறிய ரக கப்பல் ஒன்றை சேவையில் அமர்த்துவது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. ''வாதுவ'' என்ற கப்பலின் முழுமையான கொள்ளளவுக்கு ஏற்ப அத்தியாவசி (3 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் புலிகள் திடீர் தாக்குதல்

### 2 படையினர் பலி; ஒருவர் காயம்

திருகோணமலை மாவட்டத்தில் கலபொத்த எனுமிடத்தில் நேற்று ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் இரு படையினர் பலியாகினர் ஒருவர் காயமடைந்தார் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன

கிழக்கில் மீண்டும் இராணுவத்தினர் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## சொத்தி உபாலியிடம் சலுகை பெற்ற பொலிஸ் அதிகாரி குறித்து விசாரணை

(கொழும்பு)

சொத்தி உபாலியிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக்கொண்டுள்ள பொலிஸ் அதிகாரிகளைக் கண்டறிவதற்கான விசாரணைகளை உயர் மட்ட பொலிசார் ஆரம்பித்துள்ளனர்.

மானிங் நகரத்தில் ஏழு லட்சம் ரூபா பெறுமதியுடைய வீடொன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு வழங்கப்பட்டமை, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் பொலிஸ் சுப்பிறிடனாக பதவி உயர்வு பெற்றமை, எட்டு உயர் பொலிஸ் அதிகாரிகளின் பிள்ளைகளுக்கு நகரிலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் இடம் எடுத்துக் கொடுக்கப்பட்டமை, என்பன சொத்தி உபாலியினால் பொலிசார் சிலருக்கு வழங்கப்பட்ட சலுகைகளில் சிலவாகும்.

இவ் விவகாரங்கள் இப்போது விசாரிக்கப்பட்டு வருவதாகவும், இதில் எவருக்காவது சம்பந்தம்இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆரின் அழைப்பு கூரேயால் புறக்கணிப்பு

### காமினி, ரணில் சந்திப்பு

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அண்மையில் பிரதமர் ரணிலையும், காமினி திசாநாயக்காவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். கட்சியில் தற்போது நடக்கும் சம்பவங்கள் குறித்து இவர் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் சிறிசேன கூரேயையும் இச் சந்திப்பிற்காக ஜே ஆர் ஜெயவர்த்தனா அழைத்தபோதிலும் அவர் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

# வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண வேண்டும்

## சட்டத்தரணிகளுக்கான கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டத்தரணிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 29ம் திகதி காலை 10. 00 மணிக்கு பொற்பதி வீதியில் அமைந்துள்ள தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளதால், மேற்படி சட்டத்தரணிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத்துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## சிறிலங்கா தூதரகம் முன் தமிழ் நாட்டில் மறியல்

தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினால் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்தும் இவற்றை தடுத்து நிறுத்த உரிய உத்தரவு பிறப்பிக்க சிறிலங்கா ஜனாதிபதியை கேட்டுக்கொள்ளுமாறும் நேற்று சென்னையில் உள்ள சிறிலங்கா துணை தூதரகம் முன்பாக தமிழக மீனவர் பேரவையை சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினர்.

சிறிலங்கா கடற்படையினால்கொல்லப்பட்ட மீனவர்க் குடும்பங்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரினர்

## சதாசிவத்தை மீண்டும்

## யுத்தச் செலவீடு வீண்விரயம் என்கிறார் காமினி திசாநாயக்கா

[கொழும்பு]

"எம்மைப்போன்ற வறிய நாடுகளுக்கு யுத்தச் செலவீடு போன்றவை வீண்விரயமானவை. இதனை தொடர்ந்து தாங்க முடியாது. யுத்தத்தினால் இருதரப்பிலும் அப்பாவிகளே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். எனவே, நாம் வடக்கு-கிழக்கு பிரச்சினையை எவ்வளவு விரைவாகத் தீர்க்க முடியுமோ அவ்

## தர்மதீபமாக இருந்தது கொலைக்களமாகியுள்ளது

### 'லங்காதீப' கவலை

[கொழும்பு]

தர்மதீபம் இன்று கொலைக்களமாக மாறியது ஏன் என்று பிரபல சிங்களப் பத்திரிகை ''லங்கதீப'' ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

பௌத்த நாடு என உலகிற்கு பிரசாரம் செய்து கொண்டு பௌத்தத்திற்கு எதிரான காரியங்களை மேற்கொள்வது ஏன்? எனவும் கேள்வி எழுப்பியுள்ளது கொலைகளும் கொள்ளைகளும் மனித துன்புறுத்தலும் இன்று மலிந்து காணப்படுகிறது என அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

## சதாசிவத்தை மீண்டும் அமைச்சராக்க முயற்சி

### 26 மாகாணசபை உறுப்பினர் எதிர்ப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண அமைச்சிலிருந்து விலக்கப்பட்ட இ. தொ. கா. உறுப்பினர் சதாசிவத்திற்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்க எடுக்கப்படும் முயற்சிக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து 26 மாகாண சபை உறுப்பினர்கள் மாகாண சபை ஆளுநருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டபோது அதற்கு விரோதமாக செயற்பட்ட சதாசிவம் மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மீண்டும் அவரை அமைச்சராக நியமிக்கும் முயற்சிக்கு இவ்வுறுப்பினர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்

## சமாதானத்துக்கான பாதை கடுமையாக இருப்பதேன்?

### • டி. பி. விஜேதுங்கா கேள்வி

(கொழும்பு)

'சமாதானத்திற்கான பாதையை ஒழுங்கமைக்கும் பணி மிகவும் கடுமையானதாக இருப்பது ஏன்? தேசியப் பிரச்சினையில் சிறிலங்கா இன்று சிக்குண்டு தவிக்கிறது பெரும்பாலான மக்கள் இன்று துன்பத்தில் வாடுகின்றனர் எனவே இது தொடர்பான கருத்துக்களை வைத்திருப்பவர்கள் அவற்றைஇன்றே தெரிவிப்பது சிறந்தது'' இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது வெசாக் தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

மக்கள் சகஜநிலையில் வாழ வேண்டும் என்பதே தனது விருப்பம் என அவர் மேலும் அச்செய்தியில் தெரிவித்துள்

(3ஆம் பக்கம் பார்க்க)

## மக்காவில் சன நெரிசல் பெருமளவானோர் பலி

(மக்கா)

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவிற்கு சென்ற முஸ்லிம்களிடையே ஏற்பட்ட சன நெரிசலில் பெருமளவானோர் கொல்லப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த வருடம் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக இருபது இலட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் கலந்து கொண்டதாகவும், சைத்தானைக் கல்லால்அடிப்பதைக்குறிக்கும் சடங்கு ஒன்றில் நெரிசல் ஏற்பட்டது என்றும், இதனால் பலர் உயிரிழந்தனர் என்றும் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை இன்னமும் வெளியிடப்பட வில்லை எனினும் இந்த வருட ஹஜ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

வளவு விரைவாகத் தீர்க்க முனையவேண்டும்” இவ்வாறு சிங்கள பத்திரிகையொன்றிற்கு அளித்த பேட்டியில் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

'திவயின' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் யுத்தத்தில் எல்லோருக்கும் தோல்வியே கிடைக்கும் என்றார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாகஉங்கள் அபிப்பிராயம் என்ன? என திவயின நிருபர் கேட்டதற்கு, வடக்கு-கிழக்கு யுத்தமானது ஒரு மரபு வழி யுத்தமல்ல அது கெரில்லா யுத்தம், இருந்தபோதும் நீண்ட காலம் சென்றுள்ளதால் புலிகள் அதனை ஒரு மரபுவழி இராணுவ யுத்தமாக மாற்றியுள்ளனர் அதன் தலைவர் பிரபாகரன் ஜெனரலாக யுத்த நடவடிக்கைகளுக்கு கட்டளையிடுகின்றார். அவர்களிடம் உள்ள ஆயுதங்கள் அவற்றைக் கையாளும்முறைகள் என்பன முழுமையான இராணுவ அமைப்பை ஒத்தவை

எமது இராணுவம் சட்ட பூர்வமான ஓர் அமைப்பாகும்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கு தஞ்சமளிப்பதில் கனடா புதிய கட்டுப்பாடு விதிப்பு

[கொழும்பு]

அகதிகளுக்கு தஞ்சமளிக்கும் தனது செயற்பாட்டில் சில கட்டுப்பாடுகளை கொண்டுவர கனடா திட்டமிட்டுள்ளது. வெளிநாட்டவர்களை வெளியேற்றவும் அகதிகளை குறைந்தளவிலேயே ஏற்றுக்கொள்ளவும் அந்நாடு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவினுள் பிறநாட்டவர் வந்து குவிவதை கனடா மக்கள் விரும்பவில்லை என கனடா குடிவரவு அமைச்சர் சேர்ஜியோ மார்சி தெரிவித்தார். 1992 இல் கனடாவிற்கு அகதி அந்தஸ்து கோரி 37,720 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாகவும் இத்தொகை 1993 இல் 20,492 ஆக வீழ்ச்சியடைந்ததாகவும் தெரிவிக்கப்படு

[3ஆம் பக்கம் பார்க்க]

## இத்தாலியில் வெளிநாட்டவர் மீது நியோ பாஸிசவாதிகள் தாக்குதல்

(ரோம்)

இத்தாலிக்கு இடம்பெயர்ந்து செல்லும் வெளிநாட்டுப் பிரஜைகள் தாக்கப்படுவதாக வெளிநாட்டு பிரஜைகள் சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகின்றது.

இத்தாலியில்இப்பிரச்சினை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு செல்வதை காணக்கூடியதாக உள்ளது. அண்மையில் சுமார் 200 நியோ பாஸிசவாத ஆதரவாளர்கள் விசென்ஸா நகர வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர் உயிரிழந்த பாஸிச தலைவர்களுக்கு அஞ்சலிசெலுத்துகின்றோம் என அவர்கள் கோஷமிட்டனர்.

இத்தாலியில் புதிய பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ள

(3ஆம் பக்கம் பார்க்க)

## குடிவரவு சட்ட மூலங்களை பிரிட்டன் கடுமையாக்கும்

பிரிட்டன் அரசு வெளிநாட்டு குடிவரவு தொடர்பான சட்ட விதிகளை கடுமையாக்குவதென முடிவு செய்துள்ளது. வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்தச் சட்ட விதிகள் பொருத்த முடையவையாகும் எனினும் பிரிட்டனில் முதலீடு செய்ய விருப்பவர்களுக்கு விசேட சலுகை அளிக்கப்படவுள்ளது.

[3ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் பதவிகாலம் 4 வருடங்களாக குறைப்பு?

[கொழும்பு]

ஜனாதிபதியிடம் குவிந்துபோயுள்ள அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்திற்கு அதிகாரங்களைவழங்குவது தொடர்பாக அரச தரப்பில் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது- இது குறித்து அரசியல்கட்சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது-

மேலும் ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை ஆறு ஆண்டுகளிலிருந்து நான்கு ஆண்டுகளாகக் குறைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகிறது-

அத்துடன் விருப்பத்தேர்வு வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக தேர்தல் தொகுதி அடிப்படையில் உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறையை மீண்டும் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகிறது- இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் எனவும் அரசாங்கம் கருதுகிறது-

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இம் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும்இதற்காக எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை எதிர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

## நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் அவசியமில்லை

[கொழும்பு]

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான பரீட்சை இம் மாதம் 27, 28, 29ஆம் திகதிகளில் சகல மாவட்ட அரச செயலகங்களிலும் நடைபெறும். இப் பரீட்சை அரச செயலகத்தின் திட்டமிடல் பகுதியில் நடைபெறும்-

இதற்கானஅழைப்புக் கடிதங்கள் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது-

இந் நேர்முகப்பரீட்சைக்கடிதம் கிடைக்காவிடினும் இப் பதவிக்கு விண்ணப்பித்தோர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியும்- பட்டதாரி என்பதை நிரூபிக்கும் சான்றிதழ், வேலையற்ற பட்டதாரி என உறுதிப்படுத்தும் கிராம சேவகர் கடிதம் என்பனவற்றை நேர்முகப்பரீட்சைக்கு எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது-

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


**பாம் போஷா**

குடும்பத்திலுள்ள சகலருக்கும் ஏற்ற தரமான சத்துணவு பாம்போஷா ப. அ. சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனையாகின்றது.

(சி-9332)


**'பொழிவு' அறிமுக விழா**

கவிஞர் நாவண்ணனின் 'பொழிவு' கவிதைநூலின் அறிமுகவிழா இன்று தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்இலக்கிய வட்டத் தலைவர் து. வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் கலாநிதி நா. சுப்பிரமணியன் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

**கண்டெடுப்பு**

பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றில் தவறவிடப்பட்ட சுவர் மணிக்கூடு ஒன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## விரிவுரைகள் ஆரம்பிக்கவுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் முதல் வாரத்தில் உளவளத்துணை கற்கைநெறியின் மூன்றாம் தொகுதி மாணவர்களுக்கான விரிவுரையும், புகைப்படக்கலை கற்கை நெறியின் 13 ஆம் தொகுதி மாணவர்களுக்கான விரிவுரையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் அன்பான வேண்டுகோள்

யாழ் மாவட்டத்தில் 1990இலிருந்து நிலவும்யுத்த நிலைமையினால் தற்போது 80,000 குடும்பங்கள் இடம்பெயர்ந்தும் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொழில் இழந்தும் இருக்கின்றார்கள்.

இதனால் போஷாக்கின்மை, உடல்உள குறைபாடு என்பவற்றினால் பெரும் அளவு சிறுவர்கள், மாணவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வலது குறைந்தோர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்துயரத்தில் இருந்து இவர்களைப் பாதுகாக்க வேண்டியது சமூக நலனில் அக்கறையுள்ள அனைவரினதும் கடமையாகும். அந்நோக்கில்,

''யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நம்பிக்கைநிதியம்'' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவர்களின் மேம்பாட்டிற்காக அரசாங்க அதிகாரிகள், துறைசார் வல்லுநர்கள் கொண்ட குழுவின் வழிகாட்டலுடன் யாழ். அரசாங்க அதிபர் இந்நிதியை நிர்வகிப்பார்.

இந் நிதியத்துக்கான கொடைகள் அனைத்தும் அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம் என்ற பெயருக்கே அனுப்பப்படவேண்டுமே ஒழிய எந்தவொரு தனிப்பட்டவரின் பெயருக்கும் அனுப்பப்படக் கூடாது.

இத் துர்ப்பாக்கியசாலிகளின் நல்வாழ்வில் தாங்களும் அக்கறை கொண்டு தங்களின் அன்பளிப்பினை தாராள மனதுடன் வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்
யாழ். மாவட்டம்

(சி-9513)


**கொழும்பு ஸ்ரூடியோ**

தொழில் நுட்பத்தில் 35 வருட அனுபவம் வாய்ந்தவர்கள் தரமான

- Line, Half tone and Colour Blocks
- றபர் சீல் Rubber Stamps
- சில்க் ஸ்கிறீன் Silk Screen
- Re copy பழைய படங்களில் இருந்து புகைப் படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் தரமாகப் பெற்றுக்கொள்க.

**கொழும்பு ஸ்ரூடியோ**

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9399)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
30 - 07 - 1957

உதிர்வு:
11 - 04 - 1994

அமரர்

**நடராஜா மனோகரராஜா**

எங்கள் மகனே நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன்னை நாம் மறவோம், கண்ணீர்ப்பூக்களால் நாம் அர்ச்சிக்கிறோம்.

உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

- குடும்பத்தினர்

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

(8365)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## கண்ணீர் அஞ்சலி

22-5-94-ல் விமானக் குண்டுவீச்சின்போது அகால மரணமடைந்த நீர்வேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் பிரிவால் இன்னலுறும் குடும்பத்தினருக்கும், நீர்வேலி ப. நோ. கூ. சங்க பணிப்பாளர்கள், பொதுச் சபை உறுப்பினர்கள், பணியாளர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்களும்,
பொதுச்சபை உறுப்பினர்களும்,
பணியாளர்களும்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம். (சி-9507)

## நினைவு கூருகின்றோம்...

**25.05.1994**

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை-சாகாமம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். ரமேஸ்** (சி. லோகநாதன்-அம்பாறை)

திருமலை - தம்பலகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

✱ **சுரேஸ்-சுந்தர்** (திருநாமம் மகாலிங்கம் - முள்ளிப்பொத்தானை - திருமலை)

1988ஆம் ஆண்டு யாழ்- ஏழாலையில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர்,

**அப்பன்** (கனகரட்ணம் பிரபாகரன்-நெட்டிலிப்பாய் கோண்டாவில்-யாழ்)

யாழ். பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஒஸ்ரின்** (கணேசன் இளங்கோவன்-தும்பளை, பருத்தித்துறை- யாழ்)

1989ஆம் ஆண்டு செம்பிமலையில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். றெஜினோல்ட்** (கிருஷ்ணன் வசீகரன்-திருமலை)

மாவிட்டபுரத்தில் தேசவிரோதசக்திகளினால் அடித்துக் கொலைசெய்யப்பட்டஎமதுஆதரவாளரான,

**ராஜு** (சபாபதி பாலசிங்கம்)

1990ஆம் ஆண்டு அம்பாறை - காரைதீவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த

**சுந்தர் சந்தர்** (அசமட்லெப்பை செயலால்தீன்-பள்ளிவாசல் வீதி, வேப்பானைச்சேனை)

1993ஆம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான திடீர்ச்சமரில்வீரச்சாவெய்திய,

**மலரோன்** (அழகுரத்தினம் சத்தியமூர்த்தி- உடையார்கட்டு - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

✱ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9512)


# செம்பியன்பற்று - புனித பிலிப்புநேரியார் திருவிழா

# ★ 124-வது ஆண்டு சிறப்பு மலர் ★

## நாளை 26-5-94

## யாழ் ஆயரின் ஆசிகள்

யாழ் குடாநாட்டில் கத்தோலிக்க விசுவாசத்தை ஆரம்ப காலத்திலேயே இறைவனின் நன்கொடையாகப் பெற்றுக்கொண்ட மக்களில் செம்பியன்பற்று மக்களும் அடங்குவர். அவர்கள் புனித பிலிப்புநேரியார் பெயரில் தமக்கென ஓர் ஆலயத்தை நிறுவி 124 ஆண்டுகளாகி விட்டது என அறிவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புனித பிலிப்புநேரியாரின் பரிந்துரைகளினால் இறைவனிடத்தில் மகத்துவமான அரிய வரங்களைப் பெற்றுக் கொள்ளும் மக்கள், ஆண்டுதோறும் மே 26 ஆம் நாளில் செம்பியன்பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் ஆயிரக்கணக்கில் வந்து நன்றி செலுத்த ஒன்றுகூடுவதனால் யாழ் மறைவட்டத்தில் உள்ள பெயர்பெற்ற யாத்திரைத் தலங்களுள் அதுவும் ஒன்றாக மிக நீண்ட காலமாக விளங்குகிறது.

வாழுங் காலத்திலே செபதவம், தியானம், பிறரன்புப் பணிகளில் தலைசிறந்து விளங்கி, இறைவனுடைய விசேட அருள் வரங்களினால் அற்புதங்கள் பல புரிந்து, திருச்சபையின் வளர்ச்சிக்குப் பல வழிகளில் கடினமாக உழைத்து, உடலழியா வரமும் பெற்றுக்கொண்டவராகிய புனித பிலிப்புநேரியாரைத் தமது பரலோக பாதுகாவலராகத் தெரிந்து கொண்ட செம்பியன்பற்று மக்கள் பாக்கியசாலிகள் என்று கூறுவது பொருத்தமாகும்.

தலைமுறை தலைமுறையாகக் கத்தோலிக்க விசுவாசத்தில் வேரூன்றி, சிறந்த கிறிஸ்தவ பண்புகளுடன் விளங்கும் செம்பியன்பற்று மக்கள் எதிர்காலத்திலும் புனித பிலிப்புநேரியார் மூலமாக இறைவனின் நல்லாசிகளைப் பெற்று வளமுடன் வாழவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்,
13-05-1994

† தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

## ''இதயத்துக்கு இதயம் சொல்லும் யாத்திரை''

இந்த வகையில் ஆயிரமாயிரம் உள்ளங்களின் பரிவான வேண்டுதல்கள் புனித பிலிப்பு நேரியாரின் பரிந்துரைகளினால் பக்தர்கள் பலன் பெற்று, வருடா வருடம் தங்கள் வதிவிடம் செல்லுகின்றனர்.

ஆண்டுதோறும் மே 26ந் திகதி தங்கள் பெயர்கொண்ட புனிதர் திருநாளை வெளி ஆடம்பரங்களில் மட்டுமல்ல தம் ஆன்மீக வளர்ச்சியிலும் அவரைக் கண்டு பாவித்து தம் வாழ்க்கையில் புத்துணர்வு பெற்றுப் புதுப்பொலிவு காணும் செம்பியன்பற்று மக்கள் பாக்கியசாலிகள் ஆகும்.

இப்பகுதியில் வாழும் மக்கள் தம் பாதுகாவலரின் நல்லாசிகளைப் பெற்று கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழ இறைவன் அருள் பாலிக்க வேண்டுகின்றேன்.

அருட்செல்வி மாறிலூயிஸ்
கார்மேல் அலையகம்
நாவளயடி.

## செம்பியன்பற்று - புனித பிலிப்புநேரியார்

## ஆலய வரலாறு

செம்பியன்பற்று, வடமராட்சி கிழக்கு பகுதியிலே பழமை வாய்ந்ததும், வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஓர் இடமாகும். கடலோரமாக அமைந்திருக்கின்ற இந்தக் கிராமம் முழுமையாக கத்தோலிக்க மக்களை கொண்டது. இங்கு புனித பிலிப்பு நேரியார் பெயரிலே அமைந்திருக்கும் ஆலயம் 124 வருட பழமை வாய்ந்தது.

செம்பியன்பற்று கிராமத்திலே எப்போது கத்தோலிக்க விசுவாசம் போதிக்கப்பட்டது, எப்போது முதன்முதல் கத்தோலிக்க மக்கள் குழுமம் வாழத் தொடங்கியது என்பன போன்ற விபரங்களை வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அறிய முடியவில்லை ஆயினும் இது கடலோரமாக இருப்பதனால் போர்த்துக்கேயர் காலத்திலேயே இங்கு விசுவாசம் வித்திடப்பட்டிருக்கலாம் என்றும், அப்போதிருந்தே கத்தோலிக்க மக்கள் குழுமம் வாழத் தொடங்கியிருக்கலாம் என்றும் கருதிடமுண்டு புனித பிலிப்பு நேரியார் பெயரிலே அமையப் பெற்ற ஆலயம் ஒரு பிரபல்யமானதும் பழமையானதுமான யாத்திரைத் தலம் என்றும், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலிருந்தே இது இருக்கிறது என்றும், நல்லூர் சுவாமி S. ஞானப்பிரகாசர், அ. ம. தி., தன்னுடைய ''XXV Years' Catholic Progress'' என்ற நூலிலே குறிப்பிடுகின்றார். ஒல்லாந்தர் காலத்திலே மறைந்திருந்து இரகசியமாகவே வேதத்தைப் போதிக்க வேண்டியிருந்ததாலும், வன்னியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் இடமாக இது இருந்ததாலும், மிசனரிமார்கள் இங்கேயே தங்கியிருந்தார்கள். இங்கிருந்தே வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் பணிபுரியச் சென்றார்கள் என்றும் கூறப்படுகிறது. சுவாமி ஞானப்பிரகாசர் மேலே குறிப்பிட்ட புத்தகத்தை 1925ஆம் ஆண்டு எழுதியபோது பச்சிலைப்பள்ளி பங்கிலே புனித பிலிப்பு நேரியார் ஆலயமே மிகப் பெரிய (கிட்டத்தட்ட 60 குடும்பங்களைக் கொண்ட) ஆலயமாகவும், முக்கியமான யாத்திரைத் தலமாகவும் இருந்தது.



1870இல் அருட்திரு மான்கொட் (Maingot) என்பவரால் முதன்முதலில் ஆலயம் கட்டப்பட்டது. 1895இல் தீ விபத்து காரணமாக ஆலயமும், அருகில் இருந்த கத்தோலிக்க பாடசாலையும் பெரும் சேதத்துக்குள்ளானது ஆயரிடமிருந்து கிடைத்த உதவிப் பணத்துடன் திருத்த வேலை நடைபெற்று 1899இல் முடிவடைந்தது. ஆலய முகப்பு வேலைகளை அருட்திரு ஒலிவ் (Olive) செய்து முடித்தார். அதே நேரத்தில் அருட்திரு மான்கொட் ஆல் ஆரம்பித்து வைக்கப்பட்ட பங்குக் குருவுடைய பணிமனைக் கட்டடமும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அருட்திரு பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையின் கீழ் ஆலயம் பல முன்னேற்றங்களைக் கண்டது. அத்துடன் பங்குக் குருவின் பணிமனை புதிதாகக் கட்டப்பட்டது. அதன் பின்பு வந்த பங்குக் குருக்களால் பல புனரமைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டதுடன் 1968இல் 'போர்ட்டிக்கோ'வும் மணிக்கோபுரமும் புதிதாகக் கட்டப்பட்டன.

பச்சிலைப்பள்ளி ஆரம்பத்தில் பருத்தித்துறையுடன் இணைந்திருந்தது. 1906இல் மிருசுவில் பங்குடன் இணைக்கப்பட்டது. 1912இல் இதிலிருந்து பிரிக்கப்பட்டு 'பச்சிலைப்பள்ளி பங்கு' என தனியாக அமைக்கப்பட்டது. இதன் முதலாவது பங்குக் குருவாக அருட்திரு. பிரான்சிஸ் பணிபுரிந்தார் (1912 -- 1916) பச்சிலைப்பள்ளி பங்கிலே அநேகமானோர் கடற்றொழில் செய்பவர்கள். இவர்கள் சிங்களக் கரவலை முதலாளிமாரின் கீழ் கூலியாட்களாக தொழில் செய்து வந்தனர். சிங்களக் கரவலை முதலாளிமார்களின் அடக்குமுறைகளிலிருந்தும், சுரண்டல்களிலிருந்தும் இவர்களை விடுவிப்பதற்கு போராடி வெற்றி கண்ட அருட்திரு. மான்கொட் என்ற குருவை மறக்க முடியாது.

வருகிற ஆண்டு இவ்வாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவாகும்.

- லொறற்

## பங்குத்தந்தையின் இதயத்திலிருந்து ...

சிறுவயதிலிருந்தே எனது கிராமமாகிய கரவெட்டியிலிருந்து வருடா வருடம் என் பெற்றோரோடும், சகோதரர், உறவினரோடும் புனித பிலிப்புநேரியார் ஆலயத்திற்கு யாத்திரையாக வந்த இனிய இதய நினைவுகளை மீட்டிப் பார்க்கிறேன். யாத்திரிகனாக வந்த என்னை இவ்வாலயத்திற்கே பங்குத்தந்தையாக்கிய புனித பிலிப்பு நேரியாரின் ஆசிருக்காக, என் இதயம் நன்றிக்கீதம் பாடுகிறது. பழமையும், பண்பாடும், பக்தியும் நிறைந்த செம்பியன்பற்று இறைமக்களுக், இங்கே புகலிடம் தேடி வந்து குடியேறியிருக்கும் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்களும், யாத்திரையாக வரும் பலசமய பக்தகோடிகளும், புனிதரின் பாதுகாவலை அடைந்து விண்ணக வாழ்வுசேர எனது இதய ஆசிகள்.

அருட்தந்தை ம. சே. கருணாரத்தினம்
புனித பிலிப்புநேரியார் ஆலயம்
செம்பியன்பற்று

## வாழ்த்துச் செய்தி

செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் யாத்திரை ஸ்தலமானது நெய்தல் நிலப்பரப்பிலே கம்பீரமாக காட்சி தரும் இவ்வாலயம் அமைக்கப்பட்டு 124 வருடங்கள் பூர்த்தியாகும் இவ் வேளையில் அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமான செம்பியன்பற்று பங்கு கத்தோலிக்க திருச்சபையானது தனது தளராத விசுவாச நம்பிக்கையால் தளைத்தோங்கி நிற்கின்றது.

இவ்வாலயம் வடக்குக்கிழக்குப் பகுதியிலே ஒரு யாத்திரை ஸ்தலமாக விளங்குவது அதன் தனிச் சிறப்பாகும்.

இப்பங்கின் வளர்ச்சிக்கு முன்நின்றுழைத்த குருக்கள், துறவியர்கள், பங்கு மக்கள் ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூர்ந்து நன்றி கூறுவது சாலச் சிறந்ததாகும்.

புனிதரின் திருவிழாவினைக் கொண்டாடும் வைகாசி 26-ம்நாளிலே புனிதரின் அருள் பெறுவது அடியார்கள், பக்தர்களுக்கு பெரும் பாக்கியமாகும்

இந்நாளிலே யாவர்க்கும் இறைவனின் ஆசி கிட்ட எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

பி. ஆர். மதுரநாயகம்
உப அஞ்சல் அதிபர்
செம்பியன்பற்று

(8304)

## சிந்தனைக்கு

உன் குறைகளை உணர உன்னை மட்டும் நம்பாதே நண்பர், பகைவர் ஒவ்வொருவரையும் பயன்படுத்து.

- அலெக்சாண்டர் போப்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-05-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண் - 05

## மக்களினாலேயே தீர்மானிக்க முடியும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக கட்சியின் தலைவியான எழுபத்தியெட்டு வயது நிரம்பிய சிறீமாவோ பண்டாரநாயக்காவை தெரிவு செய்துள்ளது, மூன்று வருடங்களின் பின்னர் கூடிய கட்சியின் தேசியக் கமிட்டியில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டிருப்பினும், அதன் பிற்பாடு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சிறிமாவோ பண்டாரநாயக்காவா? அன்றி அவரது மகள் சந்திரிகா குமாரணதுங்காவா? என்ற கேள்வியைப் பலரி மத்தியில் எழுப்பியிருந்தது; இதற்குப் பல காரணங்களும் இல்லாமல் இல்லை.

கடந்த ஒரு வருட காலத்தில் தென்னிலங்கை அரசியற் களத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் மேல் மாகாண முதலமைச்சரான சந்திரிகா குமாரணதுங்காவின் அரசியல் செல்வாக்கை கணிசமாக உயர்த்தியது. மேல் மாகாண சபை முதலமைச்சரான சந்திரிகாவின் தலைமை ஆளும் கட்சிக்கு பெரும் சவாலாகவும் வளர்ந்தும் வந்தது

மேலும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட வெற்றியானது சந்திரிகாவின் வெற்றியாகவே விமரிசிக்கப்பட்டது, இதே சமயம் இத்தேர்தல் வெற்றிக்கு சந்திரிகா குமாரணதுங்காவும் கடுமையாக உழைத்துமிருந்தார். இந்நிலையில், வயது முதிர்ந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் இருந்த சுதந்திரக் கட்சிக்கு சந்திரிகா குமாரணதுங்காவினால் இளம் இரத்தம் பாய்ச்சப்பட்டது போன்று இருந்தது.

அத்தோடு சந்திரிகா குமாரணதுங்கா மீது சிங்கள மக்களின் நம்பிக்கையும் வளர்ந்து வந்தது. ஒன்று அரசியலுக்கு புதிய தலைமை ஒன்றை சிங்கள மக்கள் விரும்பியமை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம்

# அமைச்சர்கள், பா. உ.கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

அதிகார துஷ்பிரயோகம், ஊழல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

'லங்கா தீப' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும்: இனிமேல் ஐக்கிய தேசியக் கட்சியில் அதிகார துஷ்பிரயோகம், ஊழல் அடக்கு முறைகள் என்பவற்றுக்கு இடம் கிடையாது; இவற்றில் ஈடுபடுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என தெரிவித்தார்.

## பிரேமா கொலை குறித்து புதிய விசாரணை இல்லை

[கொழும்பு]

ஜனாதிபதி பிரேமதாசா கொலை தொடர்பாக புதிய விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என பிரேமதாசா குடும்பத்தினரின் கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதனையடுத்து ஐ.தே.கவில் பிரேமதாசா ஆதரவாளர்களுக்கும் விஜேதுங்காவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் உள்ள பிளவு மேலும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.

## தேசிய பட்டியல் உறுப்பினர் ஏன் பதவி துறக்கவில்லை?

### ஜனாதிபதி கேள்வி

(கொழும்பு)

தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மேலும் நான்கு உறுப்பினர்கள் பதவிகளைத் துறக்க முன் வராததையடுத்து ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கோபம் கொண்டு காணப்படுகிறார் என்று ஐ.தே.க வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் இவர்கள் ஏன் அவ்வாறு செய்யவில்லை? இவ்வாறு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அண்மையில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் கேள்வி எழுப்பினாராம்.

இதேவேளை இந்த உறுப்பினர்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எந்தவொரு நன்மையும் கிடைக்கப் போவதில்லை எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

## தே.பட்டியல் பா. உ.களோடு தொடர்ந்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

பதவியைத் துறக்குமாறு வேண்டுகோள் விடப்பட்ட தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு வந்த உறுப்பினர்களுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுடன் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்ற போதும் இதுவரையில் இறுதித் தீர்மானமொன்று எடுக்கப்படக் கூடிய சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை எனவும் கூறப்படுகிறது

இதேவேளை ஐ.தே.கவின் நிர்வாக உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் தொடர்ந்தும் இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு எதுவும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

## பிரேமா கொலை குறித்து மூவர் மட்டும் தடுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலை தொடர்பாக தற்போது தடுத்து வைக்... பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 05- 25**

**புதன் இரவு**

08. 01- குயிலோசை - முல்லை கிராமியக் கலைஞர் எஸ். எஸ். மணியம் அவர்களுடான செவ்வி.
08. 20 - ஏர் முனை - ''நாமினி தேவையா?'' - தனிநடிப்பு
08. 30 - செய்திகள்
08. 40 - நாடகம் ''மன உறுதி''.

**1994- 05- 26**

**வியாழன் காலை**

07. 02- மாவீரவணக்கம்
07. 15- விடுதலைகீதங்கள்
07. 30 - செய்திகள்
07. 35- பத்திரிகைச் செய்திகள்
07. 40- விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டி

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் உள்ள மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியர

## சிறிலங்கா இறைசேரி நிர்வாகத்தில் வெற்றிடம்?

(கொழும்பு)

சிறிலங்காவின் இறைசேரி நிர்வாகத்தில் வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நிரந்தரமானதொரு நிதியமைச்சரோ அல்லது நிரந்தரமான நிதி அமைச்சு செயலாளரோ இல்லாத நிலையே நீண்ட காலமாகக் காணப்பட்டது தெரிந்ததே

இறைசேரியின் செயலாளராகவும், நிதியமைச்சு செயலாளராகவும் கடமையாற்றிய ஆர். பாஸ்கரலிங்கம் சுகவீன விடுப்பில் சில காலமாக வெளிநாட்டில் தங்கியிருப்பதும், பதில் இறைசேரி செயலாளரான என். வி.கே. கே. வேரகொடமுன்கூட்டியே திட்டமிட்டவாறு அமெரிக்கா சென்றிருப்பதும், இரண்டாவது பதில் செயலாளரான கே. சண்முகலிங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கூட்டத்திற்கு மணிலா சென்றுள்ளதும் இந்த வெற்றிடம் ஏற்படுவதற்கு காரணமாகும் என சொல்லப்படுகிறது.

இதேவேளை கே. சண்முகலிங்கமும் கண்ணில் அவருக்கு ஏற்பட்டுள்ள சுகவீனத்தையடுத்து விரைவில் பதவியிலிருந்து ஓய்வு பெறலாம் எனக் கூறப்படுகிறது.

## பத்திரிகை சுதந்திரத்திற்கு தடைவரின் பதவிதுறப்பு

### கலாநிதி விக்கிரமவீரசூரிய

(கொழும்பு)

எனது பதவிகளை ஏற்கும் போது ஜனாதிபதியிடம் சில விடயங்களை தெட்டத் தெளிவாக தெரிவித்தேன். அவற்றை நிறைவேற்றுவதற்கு எனக்கு தடை விதிக்கப்பட்டால் உடனேயே இப் பதவியை உதறித்தள்ளி விட்டு வெளியேறி விடுவேன். இவ்வாறு திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரமவீரசூரிய தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், பத்திரிகைச் சுதந்திரம் நாட்டிற்கு மிகவும் அவசியமானது. லண்டனின் பி.பி.ஸி நிறுவனத்திற்குள்ள சுதந்திரம் எமது பத்திரிகை நிறுவனங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். பத்திரிகை சுதந்திரத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையில், வேலை செய்யும் பத்திரிகையாளருக்கு எந்தவகையிலாவது அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் இப் பதவியை நிச்சயமாக உதறித் தள்ளுவேன். இதனை இம் முறையும் கூறியுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

## சிறிமாவோவை ஓரங்கட்ட சு. கட்சியில் சிலர் முயற்சி?

### - பிரதேச சபை உறுப்பினர்

சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அரசியலிலிருந்து ஓரம் கட்ட கட்சியிலுள்ள சிலர் முற்படுவதாகவும், இச் சதித் திட்டத்திற்கு ஒரு போதும் இடம் கொடுக்கப்படக் கூடாது எனவும் கொட்டிகாவத்த முல்லேரியா பிரதேச சபை உறுப்பினர் சுகத் எவாபத்திரான கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தென்மாகாண சபைத் தேர்தலில் கட்சி பெற்ற வெற்றிக்காக மேல்மாகாண முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிற்கும் தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையில் திருமதி சிறிமாவோவின் பெயர் இடம் பெறவில்லை. இது அவரைக் கட்சியின் தலைவி பதவியிலிருந்து நீக்கி கட்சியை நாசமாக்க சிலர் எடுக்கும் முயற்சியை கோடி காட்டுவதாகவும் இதனால் இந்த பிரேரணையை தான் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டபூர்வமான அணி எனதே பிரேமச்சந்திர உறுதி

(கொழும்பு)

தனது அணியே சட்டபூர்வமான ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி என்றும் ஜனநாயக ... தெரிவித்துள்ளார்.

தனது அணியின் சட்டபூர்வ தன்மை குறித்து எவரும் சந்தேகம் கொள்ளத் தேவை...

அரசியலுக்கு புதிய தலைமை ஒன்றை சிங்கள மக்கள் விரும்பியமை இதற்குக் காரணமாக இருக்கலாம். இவ்வாறு விரும்பியமைக்கு பழைய தலைமைகளிலும், கொள்கைகளிலும் சிங்கள மக்கள் நம்பிக்கை இழந்து விட்டமை காரணமாகக்கொள்ளலாம் அத்தோடு, மக்களின் இவ் எதிர்பார்க்கைக்கு ஏற்ப புதிய தலைமைத்துவத்தை சந்திரிகா குமாரணதுங்கா வழங்குவார் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. கடந்த மேதினத்தன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வரலாறுகாணாத ஊர்வலத்தில் கூடிய மக்கள் தாங்கி வந்த சிறிமாவோவின் படங்களையும், அவரைப் புகழ்ந்து எழுப்பிய கோஷங்களையும் விடவும் சந்திரிகா குமாரணதுங்காவின் படங்களும், அவரைப் புகழ்ந்து எழுப்பிய கோஷங்களும் அதிகமாக இருந்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ள முடியும் இவ்வாறானதொரு சூழ்நிலை உருவாவதற்கு சிறிமாவோ தனது அடுத்தவாரிசு சந்திரிகா என உணர்த்தும் விதத்தில் கடந்த காலத்தில் நடந்து கொண்டமையும் காரணமாகும்.

இதே சமயம், சந்திரிகாவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை விரும்பியதாகவே தெரிகின்றது "பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் - எதிர்க்கட்சிக் கூட்டு - ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை உரிய நேரத்தில் கட்சி தீர்மானிக்கும்" என சந்திரிகா கூறியதில் இருந்தே கடந்த வருடம் கட்சியின் பொதுக்குழு எடுத்த முடிவை அவர் அசட்டை செய்து புதிய முடிவு ஒன்றை எதிர்பார்த்தார் என்று கூறிவிட முடியும்.

ஆனால், தற்பொழுது கட்சி எடுத்துள்ள முடிவானது, ஒருவகையில் சந்திரிகாவிற்கும், மாற்றத்தை விரும்பும்சிங்களமக்களுக்கும் ஏமாற்றத்தைக்கொடுக்கும் என்றே கூறமுடியும்; ஆனால், இவ்வாறான முடிவை சுதந்திரக் கட்சியின் தேசியக் கமிட்டி எடுத்தமைக்கு பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா தானே போட்டியிட விரும்பியிருக்கலாம். அல்லது கட்சிக்குள் உள்ள மூத்த உறுப்பினர்களும், தீவிர பௌத்த - சிங்கள கோட்பாட்டாளர்களும் சந்திரிகாவை எதிர்த்திருக்கலாம்.

இதில் எதுவாக இருப்பினும், இது சுதந்திரக்கட்சியைப் பொறுத்து நன்மை தரக் கூடிய முடிவாக இருக்கும் என்று கூறிவிட முடியாது, சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராகக் கட்சியின் தேசிய கமிட்டி தீர்மானிக்கும் உரிமை பெற்றிருக்கலாம்; ஆனால், நாட்டின் ஜனாதிபதியைத் தீர்மானிப்பவர்கள் வாக்காளர்களே. இந்நிலையில் மாற்றத்தை விரும்பும் சிங்களவாக்காளர்கள் வயது முதிர்ந்த சிறிமாவை ஏற்றுக் கொள்வார்களா என்பதைத் தேர்தலே தீர்மானிக்க முடியும்.

---

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கொலை தொடர்பாக தற்போது மூன்று தமிழ் இளைஞர்கள் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இக் கொலை தொடர்பாக கைதான 21 பேரில் மீதிப்

என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் வருமாறு: எஸ் ரவீந்திரன், சுரேந்திரன் சபாரத்தினம் பரமலிங்கம் நித்தியானந்தன், அல்லது சந்திரன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது-

பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள் நடத்தப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தனது அணியே சட்டபூர்வமானஜனநாயகஐக்கியதேசிய முன்னணிஎன்றும் ஜனநாயக ஐக்கிய முன்னணியில் இருந்து கொண்டு வேறு கட்சிகளை அமைக்கமுயலும் அல்லது வேறு கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோர் கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் எனவும் ஜீ எம்; பிரேமச்சந்திர

தனது அணியின் சட்டபூர்வதன்மை குறித்து எவரும் சந்தேகம் கொள்ளத்தேவையில்லை எனவும் சகலரும் தனது தலைமையின் கீழ் இயங்கும் பிரிவுக்கு ஒத்துழைப்பு தரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

**விசேட**

## சிற்றூர்தி சேவை

செம்பியன்பற்று கிறிஸ்தவ ஆலய ஆண்டு உற்சவத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு சிற்றூர்தி சேவை சங்கத்தால் இன்றும் நாளையும் விசேடபோக்குவரத்து சேவைகள் மேற்கொள்ளப்படும்-

இதற்கான நேர அட்டவணை யாழ். மத்திய பஸ் நிலையத்திலும், பருத்தித்துறை பஸ் நிலையத்திலும் விளம்பரப் பலகையில் தரப்பட்டிருக்கும்-

**சமாதானத்துக்கான**

வார்.

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா சமாதானத்திற்குத் தடையாக இருக்கும் காரணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் போது வடக்கு, கிழக்கில் இராணுவத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது கடந்த 22-ம் திகதி நீர்வேலியில் நடைபெற்றுள்ள குண்டுத்தாக்குதலும் கவனத்துக்குரியது என பி.பி.ஸி- செய்தியாளர் கூறினார்.

**அகதிகளுக்கு**

இறது.

கடந்த ஆண்டு கனடாவில் நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில் 47 சதவீதமான கனேடியர்கள் தம் நாட்டிற்குள் அளவுக்கு அதிகமாக குடிவரவு இடம்பெற்றுள்ளதாக கூறினர். மூன்றில் ஒரு பகுதி கனேடியர் தம்மிடமிருந்த வேலைகள் குடியேறியவர்களால் அபகரிக்கப்பட்டுவிட்டன என்கின்றனர்

**அத்தியாவசிய**

யப் பொருட்களை ஏற்றுவதற்கு தனியார்துறையினரும், கூட்டுறவுச் சங்கங்களும் முன்வரவில்லை, இதனால் மேற்படி கப்பல் மூலம் வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வருவது தற்போது தடைப்பட்டுள்ளது.

இதனால் பொருட்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கான மாற்று ஏற்பாடாகவே சிறிய கப்பல் ஒன்றை சேவையில் அமர்த்துவது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ஈ)

**மக்காவில்**

யாத்திரைகளில் பல்வேறு காரணங்களினாலும் இதுவரை 829 பேர் உயிரிழந்துவிட்டதாக சவூதி அரேபிய சுகாதார நல அமைச்சு கூறியுள்ளது.

**குடிவரவு**

பத்து லட்சம் ஸ்ரேலிங் பவுண் வைத்திருப்பவர் அல்லது ஏழுலட்சத்து ஐம்பதாயிரம் ஸ்ரேலிங் பவுண்களை அரசாங்க சேமிப்பு பத்திரங்களில் அல்லது பங்குகளில் முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கு பிரிட்டனில் தங்கியிருப்பதற்கு ஒருவருட காலம் அனுமதி அளிக்கப்பட இருக்கிறது.

அக்டோபர் மாதம் முதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் எனவும் கூறப்படுகிறது: தனியார் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளின் வெளிநாட்டு மாணவர்களின் வருகை தொடர்பான பதிவுகள் அரசாங்க அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட இருக்கின்றது

**வடக்கு**

எனவே இது ஓர் அதிசயிக்கதக்க வகையிலான யுத்தம் கெரில்லா அணியும் இன்று மரபு ரீதியான இராணுவ அணியாகியுள்ளது. பிரபாகரனின் திறமைக்கு அமைய அது வடிவமைக்கப்பட்டுள்ளது எப்படியாக இருந்த போதும் யுத்தம் சென்ற காலங்களில் நான் எதிர் பார்த்ததை விட குறைவாகவே நடைபெற்றது என்பது என்னுடைய அபிப்பிராயம் இராணுவத் தளபதிகளுடன் பேச்சுக்கள் நடாத்திய போது இதனை அறிய முடிந்தது என்றார்.

வடக்கு-கிழக்குபிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டியது யுத்தத்தின் மூலமாகவே அன்றி பேச்சு வார்த்தை மூலமா? என அவரிடம் கேட்கப்பட்ட போது

அவை இரண்டும் தேவை யுத்தத்தினால் விடுதலைப் புலிகள் அமைப்பை ஓரளவு பலவீனப்படுத்தலாம் இருந்தாலும் முழுமையான வெற்றியை அடைய முடியாது இருந்த போதும் எனக்குத் தெரிகின்றது இவ் யுத்தத்தினால் இரு தரப்பினரும் களைப்படைந்து விட்டார்கள் மக்களும் கஷ்டங்களை எதிர் நோக்குகின்றார்கள் என்றார்.

**இத்தாலியில்**

சில்வியோ பெர்சஸ்கோனி பாஸிச உறுப்பினர்கள் ஐவரைத் தனது அமைச்சரவையில் சேர்த்துள்ளார் இது அயலில் உள்ள ஐரோப்பிய நாடுகளிடையே அதிர்ச்சியைத்தோற்றுவித்துள்ளது.

---

**மருந்துப் பொருள்கள், உபகரணங்கள்**

## வடக்கே எடுத்துச் செல்ல புதிய நடைமுறைத் திட்டம்

(கொழும்பு)

வடபகுதிக்கு மருந்துப் பொருள்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு புதியநடைமுறைத் திட்டம் ஒன்றை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டிருக்கிறது-

பிரிகேடியர் குலதுங்காவினால் ஒப்பமிட்டு வெளியிடப்பட்டிருக்கும் மேற்படி புதிய நடைமுறைத் திட்டம் உடனடியாக அமுலுக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் மருந்துப் பொருள்களின் விபரமும், தடை விதிக்கப்பட்டிருக்கும் மருந்துப் பொருள்களின் விபரமும் அறிவிக்கப்பட்டுள்ளது-

மேலும் இம் மருந்துப் பொருள்களை எடுத்துச்செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய புதிய நடைமுறைகள் குறித்தும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் துறையினர் கடைப்பிடிக்க வேண்டிய புதிய விதிமுறைகளும் அரச நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய புதிய விதிகள் குறித்தும் தனித்தனியாக அறிவிக்கப் பட்டிருக்கிறது-

(ஈ),(நி)

**ஜனாதிபதியின்**

பார்ப்பதாகவும் இது தொடர்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே கருத்துகள் பெற்றுக்கொள்ள இருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதியிடம் தற்போதுள்ள அதிகாரங்களில் எவற்றை விலக்கி கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக ஆலோசனைகள் பெற்றுக் கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது.

இப்படியான மாற்றத்தை ஏற்படுத்துவது கடினமான ஒரு காரியம் என்றும் இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கணிசமானோரின் ஆதரவு பெற வேண்டும் எனவும் அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

## நாடு செழிக்க நன்னீர் மேனுங்கோம்

# பெண்துணை வேண்டிட ஆணே பொன்னும் பொருளும் ஏன் கேட்கிறாய்?

யாழ். ஸ்ரீதரில்
மண்ணுக்காக
தினசரி மாலை 3.00மணி,
6.00 மணி
சனி, ஞாயிறு காலை
10 30 மணி
மாலை 3மணி, 6மணி
(சி-9514)

## புலிகள் மீதானதடை நீடிப்பு தமிழக அரசுக்கு வெற்றி

### ஜெயலலிதா கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீது மத்திய அரசு மீண்டும் விதித்த தடை உத்தரவு தமிழக அரசுக்கு கிடைத்த வெற்றி என தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

பெருந்துறை தொகுதி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். எமது கட்சியோ அல்லது நானோ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்ததில்லை. ஆனால் ராஜீவின் கொலைக்கு பின் இவ் இயக்கம் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலானது என உணர்ந்து இந்த இயக்கத்தை நான் எதிர்த்தேன். தடையை நீடிக்குமாறு நான் கோரியபோது மத்திய அரசு அதை இழுத்தடித்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள்

05 . 06 - 1994

முளைத்திடும் முனைப்பொடு மாணவச் சோலை
முளைத்ததும் நிழல்தரும் வெயிலிலே நாளை!

மாணவர் எழுச்சி நாள் சிறக்க
வாழ்த்துகின்றோம்

மாணவர்கள், ஆசிரியைகள்
ஞானக்குழந்தை இல்லம்
76, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(8374)

## கண்ணீர் அஞ்சலி



### திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி
### செல்வி சிவதர்சினி சின்னத்தம்பி
### செல்வி புஸ்பராணி கணபதிப்பிள்ளை

22-5-94 அன்று அதிகாலை நீர்வேலியில் நடைபெற்ற விமானத்தாக்குதலின்போது அகாலமரணமடைந்த நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோவில் பரிபாலன சபையின் செயலாளர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களுக்கும் அவர்தம் மகளுக்கும் மருமகளுக்கும் எமது பரிபாலனசபையின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

## வீரவணக்க கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி கோட்டத்தில் கரவெட்டி வட்டத்தில் வைகாசி மாதங்களில் மண் மீட்பு போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக்கூட்டம் இன்று இரவு 7.30 மணிக்கு வதிரி உல்லியன் எல்லை அம்மன் கோயிலடியில் நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

(யோ)

## 'பரிதி' மலர் வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் இன்ரறக்ட்கழகம் இன்று தனது வருடாந்த மலரான 'பரிதி'யை வெளியிடுகின்றது. இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் றோட்டறித் தலைவர் சட்டத்தரணி கனகரட்ணம் கலந்து கொள்கிறார்.

மதிப்பீட்டுரையை யாழ் நுண் கலைப்பீடத் தலைவரும் யாழ் பல்கலைக் கழக கல்வியியற் துறை விரிவுரையாளருமான கலாநிதி சபா ஜெயராஜா வழங்குகின்றார்.

அன்று கழக நிர்வாகக் குழு உறுப்பினரின் பதவிகளும் கைமாற்றப்பட உள்ளன.

## ஆதாரம் காட்டி
## இரவும்

### அ.தி.மு.கவிற்கு ஆதரவான

## 5காங்கிரஸ்எம்·எல்.ஏ·களுக்கு விளக்கம் கோரி கடிதம்

(சென்னை)

எதிர்வரும் இடைத்தேர்தலுக்காக மைலாப்பூர் தொகுதியில் அ.தி.மு கவிற்கு ஆதரவாக பிரசாரம் செய்த 5 காங்கிரஸ் எம் எல். ஏக்களுக்கு, கட்சி அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்து அவர்களை ஏன் நீக்கக் கூடாது என விளக்கம் கேட்டு தமிழக காங்கிரஸ் கட்சி அறிவித்தல் அனுப்பியுள்ளது.

இவர்களுக்கானஇந்த அறிவிப்பை தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி அனுப்பியுள்ளார். ஏற்கனவே பெருந்துறை தொகுதியில் அ.தி மு கவுக்குஆதரவாகபிரசாரம் செய்த காங்கிரஸ்உறுப்பினர் ஒருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

செ.த்தி

டைய தற்போதய நிலை பற்றி கவலைப்படாமல் தகுந்த நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவர் என்றும் பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா கூறியுள்ளார்.

## 90-ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

(26. 5. 1994)



அமரர்

செல்வன் நாகமுத்து சற்குணபாலா

| | |
|---|---|
| தாயின் மடியில் | காலன் அழைப்பில் |
| 5-12-1965 | 26-2-1994 |
| (தமிழீழத்தில்) | (ஜேர்மனியில்) |

எம் குடும்பத்தின் இனிய விளக்கே பாலா
எங்கு சென்றாய் நீ! எங்கு சென்றாய் நீ!
எம் இனியவனே பாலா எம் தூயவனே பாலா!

## கோமாரியில் தபால்கள்

(வடமராட்சி)

'கோமாரி' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை இன்று பிற்பகல் அல்லது நாளைகாலை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது இக்கப்பல் குறித்த அத்தியாவசியப் பொருள்களுடன் நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்டு விட்டதாக தகவல் கிடைத்துள்ளது.

இக் கப்பல் தபால் பொதிகளையும் எடுத்து வருமெனஎதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து 'றுகுணு' கப்பல் வரவுள்ளது.

(யோ)

## ஹெலி தாக்குதல் படகுகள் சேதம்

குடத்தனை மணற்காடு கரையோரக் குடியிருப்புகள் மீது சிறிலங்கா உலங்கு வானூர்தி ஒன்று பரவலாகச் சுட்டதில் கரையில் கட்டிவிடப்பட்ட படகுகள் சில சேதமடைந்தன.

பலாலியிலிருந்து கடந்த ஞாயிறு இரவு 9.30 மணியளவில் வந்த இவ் உலங்கு வானூர்தி குடத்தனை, மணற்காடு கடற்பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு விட்டு அப்பகுதிக் குடியிருப்புகள் மீது சுட்டது.

பலாலி இராணுவ முகாம் நிலைகளிலிருந்தும் காலை 6.15 மணியளவில் பல ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா வேதநாயகம்

கோப்பாய் மத்தி, லைடன் பாம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா - வேதநாயகம் அவர்கள் காலமாகி விட்டார். அன்னார் திரு ஆ வேதநாயகம் (செல்லத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி யமுனா - இராசேந்திரம், தவரஞ்சன், சுரேஷ் (ஜேர்மனி), சங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி நாகரத்தினம் கந்தசாமி, காலஞ்சென்ற திரு பொ. பரமானந்தன், திரு பொ செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 25-05-94 புதன் காலை 10.00 மணிக்கு இடம்பெற்று கோப்பாய் மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் தயவு செய்து இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
வே. தவரஞ்சன்
[மகன்]

கோப்பாய் மத்தி,
இராச வீதி. [8376]

## துரைச்சாமி துரேஸ்

துரைச்சாமி துரேஸ் 10-05-94ல் அகாலமரணமானார். இவர் இராஜமலரின் (B.A' பட்டதாரி ஆசிரியர்) அன்புக்கணவரும், துளாஜினி, ராகவன் ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைச்சாமி துரையம்மாவின் அன்பு மகனும், இராசையா முத்தம்மா ஆகியோரின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-05-94 இன்று பகல் 12.00 மணிக்கு துரேஸ் இராஜமலர் இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக் கிரியைக்காக பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
காலஞ்சென்ற செல்வராசாவின் மகன்
உதயராஜா
(உதயன் மரக்காலை)

தச்சன் தோப்பு,
கைதடி.
(8371)

பாலன சபையின் செயலாளர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களுக்கும் அவர்தம் மகளுக்கும் மருமகளுக்கும் எமது பரிபாலனசபையின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்

மூவரினதும் ஆன்மா சாந்திக்காக விநாயகப் பெருமானை இறைஞ்சுகிறோம்

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார்
கோவில் பரிபாலனசபை

நீர்வேலி
25 5-94 (8378)

# அறிவித்தல்



## A. G. A சந்திரன்

12, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

இவர் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வசித்து வந்தவரும், இளைப்பாறிய துறைமுக சரக்கு கூட்டுத்தாபன உத்தியோகத்தருமாகிய அல்பிரட் ஜோர்ச் அருள் சந்திரன் அவர்கள் கொழும்பிலிருந்து 7 5-94 அன்று யாழ். வருவதற்காக பூநகரி ஆலங்கேணியில் தரித்து நின்ற போது 8 5-94-ல் அகால மரணமானார் என தகவல் கிடைத்தது. ஆலங்கேணியில் இவரைச் சந்தித்த பயணிகள், அறிந்தோர் இவருடைய பிரயாணப்பை, ஆவணங்கள் என்பவற்றை கிளிநொச்சி காவல் பணிமனையில் அல்லது யாழ்ப்பாணம் காவல் பணிமனையில் அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

இல. 11/9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி 9499)

ஜெயசீலி சந்திரன் (மனைவி)
வ. அஞ்சலோ (மைத்துனர்)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## ஆதாரம் காட்டி பெறவும்

இராசபாதையில் கரந்தன் பகுதியில் பணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு அரசியற் துறையினரால் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## பட்டமளிப்பு

அகில இலங்கை சைவப் புலவர் சங்க 34 வது ஆண்டு நிறைவு விழாவும் பட்டமளிப்பு விழாவும் இன்று காலை 9.00 மணிக்கு வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எம் குடும்பத்தின் இனிய விளக்கே பாலா
எங்கு சென்றாய் நீ! எங்கு சென்றாய் நீ!
எம் இனியவனே பாலா எம் தூயவனே பாலா!
நாம் எல்லாம் கண்ணீர் சிந்த எங்கு சென்றீர் பாலா
காலன் உம்மை கவர்ந்து சென்ற கதைகூறாயோ பாலா
எம் இல்லத்தில் பூத்த மலரே நீ உதிர்ந்தது என்னவோ
எம் இனிய விளக்கே நீர் எம்மை விட்டு சென்று
90 நாட்கள் ஆகியும் எம் இதயம் கொதிக்குதையா
எனி ஒரு பிறப்பு உமக்குண்டெனில் எம் வீட்டு
மலராய் நீர் மலரும் நாளை மடியில் ஏந்த கரங்கள்-
தவிக்குதையா.

நாளை (26-5-94 ல்) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர், உறவினர்கள்
நா. மகேந்திரன்

மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி. [8379]

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பவ ஆண்டு வைகாசி மாதம் 13ஆம் நாள் (27-05-1994) வெள்ளிக்கிழமை காலை 7 30 மணி தொடக்கம் 9 30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருநிறைச் செல்வன் | எமது புத்திரி திருவளர் செல்வி |
|---|---|
| **ஜெயக்குமார் (பவா)** | **ஸ்ரீதேவி (ரூபி)** |
| (பயிற்சி ஆசிரியர், பலாலி ஆசிரியர் கலாசாலை) | (ஆசிரியை, யா / இளவாலை மெய்கண்டான் ம. வி.) |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு சட்டநாதர் வீதி, நல்லூரிலுள்ள இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்களும் குடும்ப சமேதராய் வருகை தந்து மண விழாவில் கலந்து மணமக்களை வாழ்த்தி, மண்டபத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்,

திரு. திருமதி இ. செல்லத்துரை
குடும்பத்தினர்
''செல்வபதி''
மல்லாகம்.

திருமதி பொ. கருணாநிதி
புகையிரத நிலைய வீதி,
(உப தபால் நிலையம் முன்பாக)
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(8377)

(8371)

## திருமதி கார்த்திகேசு பொன்னம்மா

புங்குடுதீவு - 6

புங்குடுதீவு இறுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு பொன்னம்மா நேற்று பிற்பகல் காலமானார். அன்னார் நுவரெலியா முன்னைநாள் வர்த்தகர் சண்முகம் கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், திரு, திருமதி இராமலிங்கம் அவர்களின் மூத்த மகளும், திரு திருமதி சண்முகம் அவர்களின் மருமகளும்,

கனகசபை (இளைப்பாறிய அதிபர், இளையதம்பி வித்தியாலயம், யாழ்ப்பாணம்), கனகாம்பிகை (இந்தியா), இந்திராணி (ஆசிரியை காசிப்பிள்ளை வித்தியாலயம் கல்வியங்காடு), தனபாலசிங்கம் (முன்னைநாள் ஆசிரியர், முத்துத்தம்பி வித்தியாலயம் திருநெல்வேலி - [சுவிஸ்]), கலாநிதி குகபாலன் (முதுநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ் பல்கலைக் கழகம்), லோகநாதன் (முன்னை நாள் அதிபர், யூலிபீல்ட் வித்தியாலயம் ஹட்டன் - [ஜேர்மனி]), திருநாவுக்கரசு (அதிபர் பராசக்தி வித்தியாலயம் புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி க. அன்னப்பிள்ளை (அதிபர் அரியநாயகன்புலம் வித்தியாலயம் புங்குடுதீவு) திரு. கா. க. கனகசுந்தரம் (இளைப்பாறிய அதிபர், ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம், புங்குடுதீவு - [இந்தியா]), திரு சி. சண்முகநாதன் (அதிபர் தமிழ் மகா வித்தியாலயம், வட்டகொட), திருமதி த தனலக்சுமி (ஆசிரியை யாழ். இந்து பிரதம பாடசாலை), திருமதி கு. கோகிலாதேவி, திருமதி லோ. காஞ்சனா [ஜேர்மனி], திருமதி தி. ஜெயலக்சுமி, ஆகியோரின் அன்பு மாமியும்

காலஞ்சென்றவர்களான இ. மயில்வாகனம், இ. தம்பிப்பிள்ளை, [இளைப்பாறிய ஆசிரியர்], மற்றும் இ. குலசேகரம்பிள்ளை [வர்த்தகர்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற ச. பொன்னையா மற்றும் ச. சொக்கலிங்கம் [இளைப்பாறிய அதிபர்], திருமதி ந. சிவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று 25-05-94 முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும் இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
[K. K. S. வீதிக்கு சமீபமாக]
கொக்குவில். (8375)

தகவல்:
கலாநிதி கா. குகபாலன்
(மகன்)